பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

08 12 2025 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. வந்தே மாதரம் என்ற மந்திரம் நாட்டு மக்களுக்கு வலிமையையும், உத்வேகத்தையும் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்பான விமான பயணத்திற்கு அரசு முன்னுரிமை அளிப்பதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

3. சமூக நீதியை உறுதி செய்யும் திட்டங்களால் பல கோடி மக்கள் பயன் பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

4. காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்க தமிழகத்திலிருந்து சென்ற 4-ஆவது குழுவுக்கு வாரணாசியில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

5. ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

வந்தே மாதரம் என்ற மந்திரம் நாட்டு மக்களுக்கு வலிமையையும், உத்வேகத்தையும் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று வந்தே மாதரம் தேசிய பாடலின் **150-**ஆவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் உந்து சக்தியாக வந்தே மாதரம் திகழ்ந்தது என்றும் குறிப்பிட்டார்.

வந்தே மாதரத்தின் புனிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் இந்த சிறப்பு விவாதம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை பூர்த்தி செய்வதற்கு இப்பாடல் நமக்கு உத்வேகத்தை அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வந்தே மாதரத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவின்போது அப்போதைய காங்கிரஸ் அரசால் கொண்டுவரப்பட்ட அவசர நிலையால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்ததாக அவர் கூறினார்.

சுதந்திரத்திற்காக இன்னுயிரை ஈந்த மாபெரும் தலைவர்களையும் கடுமையான சிறை தண்டனை அனுபவித்த சுதந்திரப் போராட்ட வீரர்களையும் நினைவு கூறும் வகையில் வந்தே மாதரம் பாடல் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வந்தே மாதரம் என்ற மந்திரம் அரசியல் ரீதியிலான விடுதலையை அளித்திருப்பதாக அவர் கூறினார்.

இந்தியாவை ஆங்கிலேய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் புனித போரின் மந்திரமாகவும் வந்தே மாதரம் திகழ்ந்தது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் உயர்ந்த கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் வந்தே மாதரம் உள்ளது என்று அவர் கூறினார்.

பல ஆண்டுகள் மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ், வந்தே மாதரம் என்ற தேசிய பாடலுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

வந்தே மாதரத்துக்கு எதிராக முகமது அலி ஜின்னா குரல் எழுப்பியபோது, அப்போதைய காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் நேரு, வந்தே மாதரம் குறித்து ஆய்வில் ஈடுபட்டிருந்ததாக பிரதமர் விமர்சித்தார்.

இந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் உறுப்பினர் கௌரவ் கோகோய், வங்கதேசத்தை சேர்ந்த பல கவிஞர்கள் சுதந்திரப் போராட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் கவிதைகளை படைத்திருந்ததாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்த விவாதத்தில் வந்தே மாதரம் பாடலை வைத்து அரசியல் செய்வதாக கூறினார்.

முன்னதாக, இந்த விவாதத்தை அவையில் அறிமுகம் செய்து பேசிய மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, **Bankim Chandra Chattopadhyay** எழுதிய வந்தே மாதரம் தேசிய பாடல், ஆங்கில ஆதிக்க நெருக்குதலுக்கு எதிராக இந்தியா போராடிய இக்கட்டான தருணங்களில் மக்களின் நம்பிக்கை ஒளிக்கீற்றாக திகழ்ந்தது என்று கூறினார்.

<<<<<<>>>>>>

பாதுகாப்பான விமான பயணத்திற்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை அளிப்பதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், விமான பாதுகாப்பில் எவ்வித சமரசமும் செய்துக் கொள்ளப்பட மாட்டாது என்று திட்டவட்டமாக கூறினார்.

அண்மையில் பல விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டதால், பயணிகளுக்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பிரச்சினையை அரசு சாதாரணமாக எடுத்துக்கொள்ளாது என்றும், தவறிழைத்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டை மேம்படுத்தும் பணிகளில் இளைஞர்களை இணைக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட மை பாரத் இணையதளத்தில் இரண்டு கோடிக்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருப்பதாக இளையோர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை வெளிக்கொண்டுவரும் தளமாக இது அமைந்துள்ளதாக கூறினார்.

தேசிய மாணவர் படை, சாரணர் இயக்கம், நாட்டு நலப்பணி மாணவர்கள் மை பாரத் இணையதளத்தில் பதிவு செய்து சமூகப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்துள்ளதாக தெரிவித்தார்.

இவ்வாண்டு நடைபெறவுள்ள தேசிய இளையோர் தினத்தையொட்டி வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்த டாக்டர் மன்சுக் மாண்டவியா, இதில் இளைஞர்கள் தங்களது செயல்பாடுகள் குறித்த கருத்துக்களை பகிர்ந்துகொள்வார்கள் என்றும் கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த இளையோர் நலத்துறை இணையமைச்சர் திருமதி **Rakcha Khadse,** ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் **13** ஆயிரத்து **200** பேர் தேசிய இளையோர் படை திட்டத்தில் பணியாற்ற அழைக்கப்படுவதாக தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கான ஆள்சேர்ப்பு தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும், மேலும் **8** ஆயிரம் இளைஞர்களுக்கு இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் திருமதி **Rakcha Khadse** கூறினார்.

<<<<<<>>>>>>

புதுதில்லி வந்துள்ள ஐரோப்பிய வர்த்தக மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஆணையர் **Maros Sefcovic**-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

இதொடர்பாக டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில், இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தூர்தர்ஷனில் திங்கள் முதல் வெள்ளிவரை தினமும் காலை 7 மணிக்கு ஒளிபரப்பாகும் சுப்ரபாதம் நிகழ்ச்சி அதிகாலையில் மனதிற்கு புத்துணர்வை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், யோகாசனம் தொடங்கி, இந்திய வாழ்க்கை முறை குறித்த பல்வேறு தகவல்கள் இதில் இடம்பெறுவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாரம்பரியம் மற்றும் வாழ்க்கை நெறியை எடுத்துரைத்து நேர்மறையான சிந்தனையை மக்களிடம் ஊக்குவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக இடம்பெற்றுள்ள சான்ஸ்கிரிட் **Subhashita** நாட்டின் தொன்றுதொட்ட கலாச்சார பண்புகளை

எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சீரிய கொள்கைகள் மூலம் சமூக நீதியின் பயன்களை மக்கள் பெற்று வருவதாக சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜூன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கொண்டுவந்த முத்ரா திட்டம் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தி இருப்பதாக தெரிவித்தார்.

சமூக நீதிக்கான திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதன் மூலம் 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் கடந்த 11 ஆண்டுகளில் வறுமையிலிருந்து விடுபட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்கள், மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி இருப்பதாகவும், குடிசை வீடுகளில் எவ்வித வசதியும் இன்றி சிரமப்பட்டு வந்த மக்களுக்கு, அடிப்படை வசதிகளுடன் கான்கிரிட் வீடுகள் கட்டித்தரப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த வீடுகளில் மின்சாரம், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அனைத்தும் செய்துதரப்படுவதாகவும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற தொலைநோக்கு பார்வையில் நடைபெற்றுவரும் காசி தமிழ் சங்கமத்தில் பங்கு பெறுவதற்காக தமிழகத்திலிருந்து சென்ற 4-ஆவது யாத்ரிகர்கள் குழுவிற்கு வாரணாசியில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

பன்முக கலாச்சார கல்வி மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர்கள் குழு காசியில் வளமான கலாச்சார தொடர்புகள் குறித்து கேட்டறிந்தனர்.

ஸ்ரீ ரன்வீர் சான்ஸ்கிரிட் வித்யாலயா மாணவர்களை ஆசிரியர்கள் குழு மங்கல இசை முழங்க வரவேற்றனர்.

காசி மற்றும் தமிழகத்தின் கலாச்சார தொடர்புகளை இருதரப்பினரும் பகிர்ந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

நைஜீரியாவின் நைஜக் மாகாணத்தில் கடந்த மாதம் கடத்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளில் 100 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பத்திரமாக மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு அரசு மருத்துவர்கள் மூலம் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டபின், அவர்களது குடும்பங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் 21-ஆம் தேதி கடத்தல்காரர்கள் நடத்திய தாக்குதலில் 303 மாணவர்களும், 12 ஆசிரியர்களும் கடத்தி செல்லப்பட்டனர்.

இதில், 50 பேர் தப்பி வந்து வீடு சேர்ந்தனர்.

மேலும், 153 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் கடத்தல்காரர்களின் பிடியிலேயே உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்களை மீட்பதற்கான முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர்கள் கூறினர்.

<<<<<<>>>>>>

பழம்பெரும் பெங்காலி, இந்தி திரைப்பட நடிகர் கல்யாண் சட்டோபாத்யாய் நேற்றிரவு காலமானார். அவருக்கு வயது 82.

அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்குவங்க மாநிலத்தின் முர்ஜிதாபாத் மாவட்டத்தின் பேகம்பூரில் 1942-ஆம் ஆண்டு பிறந்த கல்யாண் சட்டோபாத்யாய், வங்கமொழியில் சத்யஜித்ரேயின் தருண் மஜூம்தார், Safed Haathi உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

அண்மையில் அவர் இந்தியில் கஹானி படத்திலும் நடித்துள்ளார்.

400-க்கும் மேற்பட்ட திரைப்படங்களிலும், பல தொலைக்காட்சி தொடர்களிலும் கல்யாண் நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியாவின் டாஸ்மானியா மாகாணத்தின் டால்பின் வனப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

வனப்பகுதியையொட்டி அமைந்துள்ள 19 வீடுகள் முற்றிலுமாக தீக்கிரையாயின. 14 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மின் விநியோக கட்டமைப்பு, கூடாரங்கள் உள்ளிட்ட 120-க்கும் மேற்பட்ட மக்களின் சொத்துக்கள் தீயில் எரிந்துள்ளன.

<<<<<END>>>>>>